# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 20 வெள்ளிக்கிழமை 03.05.2024 கதிர் 177


## விஜயதாசவின் மனு மீது மே 7 இடைக்கால கட்டளை

நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தாக்கல் செய்துள்ள மனு தொடர்பில் இடைக்கால தடை விதிப்பதா, இல்லையா என்ற தீர்மானத்தை மே 7 வழங்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தவிசாளராக செயற்படுவதற்கு இடைக்காலத் தடை விதித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தி, நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்சவினால் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அத்துடன், பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை விடுப்பது தொடர்பாகவும் அன்றைய தினம் தீர்மானிக்கப்படுமென மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி டி.என். சமரகோன் உத்தரவிட்டார்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தவிசாளராக விஜேதாச ராஜபக்ச கடந்த ஏப்ரல் 20 ஆம் திகதி கட்சியின் நிறைவேற்றுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்டார்.

அதற்கு எதிராக கட்சியின் ☞ 2

## சட்டவிரோதச் செயற்பாடுகளுக்கு மகாவலி காணிகளில் இடமில்லை

### இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான காணிகளில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு இடமளிக்கப்படமாட்டாதுஎன பெருந்தோட்டக்கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே தெரிவித்தார்.

ஜனாதிபதி ☞ 8

## உமா ஓயா அபிவிருத்தித் திட்டம் மூலம் மின்சார சபைக்கு ரூ. 80 மில். லாபம்

### திட்டப் பணிப்பாளர் தகவல்

உமாஓயா அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதன் மூலம் மின்சார சபைக்கு நாளொன்றுக்கு 80 மில்லியன் ரூபா சேமிக்கப்படும் என அதன் திட்டப் பணிப்பாளர் சுதர்ம எலகந்த தெரிவித்துள்ளார்.

உமாஓயா திட்டத்தினால் இதுவரை சுமார் 1,500 மில்லியன் ரூபா சேமிக்கப்பட்டுள்ளது. இந்த ☞ 8

## இனி இது ரகசியம் அல்ல!

இந்தியா என்னதான் விழுந்து விழுந்து இலங்கையைக் கவனித்தாலும் உதவிகளைச் செய்தாலும் சிங்களவர்களுக்கு இந்தியா மீதான காழ்ப்புணர்வும் வெறுப்பும் சற்றும் குறையாது என்பதற்கு இப்போது வெளியாகி இருக்கும் காணொலி சிறந்த உதாரணம்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அதிகளவு விஸா கட்டணங்கள் அறவிடப்படுவது தொடர்பாக அதிகாரிகளுடன் ஏற்படும் வாக்குவாதம் தொடர்பான அந்தக் காணொலியில் இந்தியா மீதான வன்மத்தை சிங்களவர் ஒருவர் கக்குவது பதிவாகியிருக்கின்றது. இலங்கையை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு உதவினால் என்ன, பேரிடர்களில் இருந்து காக்க உதவினால் என்ன இலங்கையர்களுக்கு இந்தியா மீதான வெறுப்புணர்வு குறையாது என்பது இந்தக் காணொலியில் தெளிவாகப் புரியும்.

இது தேர்தல் காலம் என்பதால் இந்தியாவுக்குஎதிரானஇந்தஉணர்வு இனிப் பற்றிக்கொண்டு ☞ 2

## நோர்வே தூதுவர் அநுர குமாரவுடன் நேற்றுச் சந்திப்பு

நோர்வே தூதுவர் மே-எலின் ஸ்டெனர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க ஆகியோருக்கிடையிலான சந்திப்பு மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் நோர்வே தூதரகத்தின் இரண்டாவது செயலாளரான ஜோன் பிஜேர்கெம், தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி தொடர்பிலும் அரசியல் ரீதியிலான பிரச்சனைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இந்நிலையில் நோர்வே அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள உதவிகள் மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான உறவை வலுப்படுத்தலின் அவசியம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

# தொழிலாளரின் உரிமைகள் குறித்து மே தின நிகழ்வுகளில் குரல் இல்லை

### சம்பிக்க ரணவக்க சாடல்; தேர்தலே ஒரே இலக்கு எனவும் குற்றச்சாட்டு

இந்தமுறை மேதின நிகழ்வுகள் அனைத்தும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக்கொண்டு நிகழ்த்தப்பட்டனவே தவிர, தொழிலாளர் உரிமைக்காகக் குரல் கொடுப்பவைகளாக அவை அமையவில்லை என்று ஐக்கிய குடியரசு ☞ 2

## தொடர்ந்து கிறிஸ்தவத்தை அவமதிக்க சாமர சம்பத்தை அனுமதிக்கமுடியாது

### காவிந்த எம்.பி. சிற்றம்

கிறிஸ்தவத்தை அவமதிக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க கருத்துக்களை வெளியிடுவதை அனுமதிக்க முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் 3 நாட்கள் விவாதம் இடம்பெற்றது. அங்கு நாம் ஆதரங்களுடன் 4 காரணிகள் தொடர்பில் விளக்கமளித்திருந்தோம்.

தாக்குதல்கள் தொடர்பில் தெரிந்திருந்தும் அவற்றைதடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காத பாதுகாப்பு அதிகாரிகள் தொடர்பிலும், தாக்குதல்கள்தாரிகளுக்கு உதவி ஒத்துழைப்புக்களை வழங்கியவர்கள் ☞ 2

## வெளிநாட்டு நிறுவனத்திடம் விஸா விநியோகம் என்பது முழுப் பொய்

### அரசு நேற்று அறிக்கை

இலங்கைக்கு வருகைதரும் வெளிநாட்டவர்களுக்கு விசா விநியோகிக்கும் பணிகள் வெளிநாட்டு நிறுவனத்துக்கு முழுமையாக வழங்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி முற்றிலும் பொய்யானது என்று ஆளும் தரப்பு அறிவித்துள்ளது.

கட்டுநாயக்கசர்வதேச விமான நிலையத்தில் விசா விநியோகத்தில் ஏற்பட்ட தாமத நிலைமை தொடர்பில் வெளியாகிய செய்திகள் குறித்து அரச தகவல் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைக்கு வருகைதரும் வெளிநாட்டவர்கள் நாட்டுக்கு வருகை தரும் போது (உள் வருகையின் போது விசா) ☞ 2

## மூத்த அறிவுறுத்தல் சட்டத்தரணிகளாக 5 பேர் முதல் தடவையாக நியமனம்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் இலங்கை வரலாற்றில் முதல்முறையாகசிரேஷ்ட சட்டவாதிகள் ஐவருக்கு 'மூத்த அறிவுறுத்தல் சட்டத்தரணி' அந்தஸ்த்து வழங்கப்பட்டுள்ளது.

கலாநிதி ஜே.எம். சுவாமிநாதன், டி.எம். சுவாமிநாதன், ஜி.ஜி. அருள்பிரகாசம், எச்.ஆர். ஏ.டி.பி. குணதில மற்றும் எஸ்.என்.எம். குணவர்தன உள்ளிட்டோருக்கே இந்த அந்தஸ்த்து வழங்கப்பட்டுள்ளது.

சட்டத் தொழிலில் சிறந்துவிளங்குகின்றமை மற்றும் உயர்வான பண்புகளை வெளிப்படுத்தும் வகையில் அறிவுறுத்தல் சட்டத்தரணிகள் ஆற்றும் சிறப்பான சேவையைப் பாராட்டும் வகையில், 2023 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் குறித்த அந்தஸ்த்து வழங்கப்பட்டுள்ளது.

## பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு யோசனைக்கு முதலாளிகள் ஆட்சேபனை

பெருந் தோட்டத் தொழிலாளர்களின் வேதனம் அதிகரிப்பு குறித்து தொழில் ஆணையாளரினால் வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு ஆட்சேபனைகள் தாக்கல் செய்யப்படும் என முதலாளிமார் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் முதலாளிமார் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி இலக்கம் 2382/04 இன்படி, தேயிலை உற்பத்தி மற்றும் உற்பத்தி வர்த்தகம், இறப்பர் மற்றும் பதனிடப்படாத இறப்பர் உற்பத்தி வர்த்தகம் ஆகிய துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கான நாளாந்த சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டது. ☞ 2

## இந்தியத் தூதரகமும் விளக்கம்

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விசா வழங்கும் நடைமுறையை இந்திய நிறுவனங்கள் பொறுப்பேற்கின்றமை தொடர்பாக வெளியிடப்படுகின்ற தகவல்கள் தவறானவை என்று இந்திய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் விசா வழங்கும் நடைமுறையை இந்திய நிறுவனங்கள் பொறுப்பேற்கின்றமை தொடர்பாக ஊடகங்களால் முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்து ஊடகப் பேச்சாளரால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது, ☞ 2

## அ'புரத்தில் மக்கள் கருத்தறிவு

உண்மை,ஒற்றுமை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்காலச் செயலகத்தினால் அனுராதபுரம் மாவட்டத்தில் மக்கள் கருத்தறியும் பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கான நிலையான கட்டமைப்பை தயாரிப்பதற்கான செயன்முறைக்கு பொதுமக்களின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதை நோக்க ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். கோட்டையை சுற்றுலா தலமாக மேம்படுத்த வடக்கு ஆளுநர் பணிப்பு

யாழ் நகரின் முக்கிய சுற்றுலாத் தலமாகக் காணப்படும் கோட்டையை, சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கு ஏற்றால் போல மாற்றியமைப்பதற்கான புதிய திட்டங்களை வகுக்குமாறு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் அவர்கள் பணிப்புரை விடுத்துள்ளார். ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தின் போதே ஆளுநர் இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

யாழ் கோட்டையின் உட்புறம் மற்றும் வெளிப்புறச் சூழலை, சுற்றுலாப் பயணிகளை கவரும் வண்ணம் அழகுபடுத்தத் தேவையான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறும் கௌரவ ஆளுநர் தெரிவித்தார்.

யாழ் மாநகர சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தொல்பொருள் திணைக்களம் ஆகியன இணைந்து புதிய திட்டங்களை வடிவமைக்குமாறும், அதற்கான அனுமதியை மத்திய அமைச்சு மற்றும் துறைசார் திணைக்களங்களிடம் பெற்று அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுறுத்தினார்.

வரலாற்றுச்சின்னமாகக்காணப்படும்கோட்டையை பாதுகாப்பதற்கும், அதனூடாக வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கும்ஏற்றவகையில்புதியதிட்டங்கள் வடிவமைக்கப்படவேண்டும்என ஆளுநர்தெரிவித்தார். மேலும் யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய சுற்றுலா இடங்களையும் அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஆராயுமாறு ஆளுநர் தெரிவித்தார் என்றும் அவரது ஊடகப் பிரிவு தெரிவித்தது.

## இனி இது .....

எரியும். ஏற்கனவே இந்தியா இலங்கையின் வளங்களை எல்லாம் சூறையாடுகின்றது என்ற குற்றச்சாட்டு இருக்கும் நிலையில் பற்றவைக்கப்பட்டுள்ள இந்த இந்திய எதிர்ப்புணர்வு இனி முழுசாக எரியும். அது ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பெரும்பாதகமாக அமையும் என்றும் எதிர்வுகூறலாம்.

..................

காலநிலை சீரின்மையைக் காரணம் காட்டி இடைநிறுத்தப்பட்ட நாகப்பட்டினம் - காங்கேசன்துறை இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்து மீண்டும் தொடங்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மே 13 மீண்டும் தொடங்கும் என்று இந்தச்சேவையைநடத்தப்போக்கும் இந்த்- சிறீ கப்பல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் நிரஞ்சன் நந்தகோபாலன் தெரிவித்தார்.

மழைகாலம்தொடங்கிவிட்டதால் கடல் சீராக இருக்காது என்பதைக் காரணமாகக் கூறித்தான் கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டது. ஆனால், பிரச்சினை அது மட்டுமல்ல என்பதால் ஜனவரியில் மீண்டும் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்ட சேவை 4 மாதங்களாகத் தொடங்கப்படவில்லை. இப்போது, தமிழ்நாடு அரசு நாகப்பட்டினம் துறைமுகத்தைப் பயன்படுத்துவதற்கானகட்டணத்தை கட்டாயம் தரவேண்டும் என்று நின்றதால் சேவையைத் தொடங்க முடியவில்லை என்று காரணம் கூறப்படுகின்றது. சேவை தாமதமடைந்ததற்கு அதுவே காரணம் என்றும், அந்தக் கட்டணத்தை அதாவது மாதத்துக்கு 72 லட்சம் இந்திய ரூபாய்களை தமிழ்நாட்டுக்குச் செலுத்த இந்திய ஒன்றிய அரசு இணங்கியிருப்பதை அடுத்து சேவையைத் தொடங்க முடிந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

கடந்தமுறை சேவையைத் தொடங்கியபோது வசூலிக்கப்பட்ட கட்டணம் விமானப் பயணக் கட்டணத்திற்கு நிகரானதாக இருந்ததால் அந்தச் சேவையை யாரும்பயன்படுத்தமுன்வரவில்லை என்பதும் சேவையை மீண்டும் தொடங்குவதில்ஏற்பட்ட தாமதத்திற்கு முக்கிய காரணம். நாகப்பட்டினம் துறைமுகப் பயன்பாட்டுக் கட்டணம் பற்றி இப்போது தூக்கிப் பிடிக்கப்படுவதற்கும் அந்தக் கட்டண விவகாரமே காரணம். அந்தக் கட்டணத்தையும் பயணிகளிடமே வாங்கினால் மீண்டும் கப்பல் பயணத்திற்கு பயணி ஒருவரிடமிருந்து 50 ஆயிரம் ரூபாய்க்கும் மேலாக அறவிடப்படவேண்டியிருக்கும் என்பதே நிலமை.

துறைமுகக் கட்டணத்தை ஒரு வருட காலத்திற்கு இந்திய ஒன்றிய அரசு கொடுக்க இணங்கியிருப்பதால் இருவழிக் கட்டணமாக (வரி உள்ளடங்கலாக) 34,200 ரூபாய் அறவிடப்படவுள்ளது. பயணி ஒருவர் 60 கிலோ நிறையுள்ள பொதிகளை தன்னுடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார். அந்தப் பொதிகள் ஒவ்வொன்றும் 20 கிலோ நிறைக்கு மேற்படாதவையாக இருப்பது அவசியம். அதாவது, பெரும் இயந்திரங்கள் உள்ளிட்ட பொ-ருள்களை எடுத்துவரமுடியாது. ஆடைகள் உள்ளிட்ட சிறிய ரக பொருள்களையே இந்தக் கப்பல் சேவை மூலம் எடுத்துவர முடியும்.

இந்தக் கப்பல் சேவை தொடங்கினால் வியாபார நடவடிக்கைகள் இலகுவடையும் என்பதே பெரும் எதிர்பார்ப்பாக இருந்தது. இப்போது விதிக்கப்படும் கட்டுப்பாடுகளைப் பார்க்கும்போது, அதற்கு எந்தளவு சாத்தியங்கள் இருக்கப்போகின்றன என்கிற கேள்வி எழுப்பப்படுகின்றது.

இந்தப் பயணிகள் சேவையில் 'சிவகங்கை' என்கிற பெயரிலான கப்பல் பயன்படுத்தப்படவுள்ளது. இதில் ஒரே தடவையில் 150 பேர் பயணிக்க முடியும். இந்தியாவில் இருந்து புறப்பட்டு அன்றே இந்தியா திரும்பும் வகையில் இதன் பயணத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக கப்பலின் மேல் தளத்தில் கடலைப் பார்த்து ரசிக்கக்கூடிய வகையிலான 'பிரீமியர்' ஆசனங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஆனால் அந்த ஆசனங்களுக்கான ரிக்கெட் கட்டணங்கள் அதிகம். அதற்கேற்ற வகையில் பொதிகளின் நிறைகளிலும் மாற்றம் இருக்கும்.

இந்தச்சேவையாவது தொடர்ந்து இடம்பெறுகிறதா அல்லது இலங்கைத் தரப்பிலிருந்து ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி அது மீண்டும் முடக்கப்படுகிறதா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தொழிலாளரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய குடியரசு முன்னணியின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலை இலக்காகக் கொண்டே சகல அரசியல் கட்சிகளும் மே தின கூட்டத்தை நடத்தின. எந்தக் கூட்டத்திலும் தொழிலாளர்களின் உரிமைகள் பற்றி பேசப்படவில்லை. கட்சியின் அரசியல் பிரச்சினைகள், ஜனாதிபதி தேர்தல் பற்றியே கவனம் செலுத்தப்பட்டது.

மே தின கூட்டத்தை நாங்கள் நடத்தவுமில்லை, எந்த கட்சிக்கு சார்பாகவும் செல்லவுமில்லை. எமது கட்சியின் தேசிய சம்மேளம் வெகுவிரைவில் நடத்தப்படும் இதன் போது தொழிலாளரின் உரிமைகள் பற்றி விசேட திட்டங்களை முன்வைப்போம்.

சகல அரசியல் கட்சிகளும் பிரமாண்டமான முறையில் மே தின கூட்டத்தை நடத்தின. தேசிய மக்கள் சக்தியின் கூட்டம் மாத்திரமே சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. அவர்களின் கூட்டத்தில்தான் பெருமளவிலானோர் கலந்து கொண்டனர்.

மக்கள் விடுதலை முன்னணியினர் பழைய மாக்சிசவாத கொள்கையில் இருந்து விடுபட்டு நவீன அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளுக்கு அமைய செயற்பட்டால் அரசியலில் முன்னேற்றமடையலாம் என்றார்.

## இந்தியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் விசா வழங்கும் நடைமுறையை இந்திய நிறுவனங்கள் பொறுப்பேற்கின்றமை தொடர்பாக சமூக ஊடகங்கள் உட்பட பல்வேறு ஊடகங்களில் வெளியாகியுள்ள அறிக்கைகள் மற்றும் கருத்துகள் தொடர்பாக நாம் அறிந்துள்ளோம்.

இந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிறுவனங்கள் இந்தியாவை தளமாகக்கொண்டு இயங்கும் நிறுவனங்களோ அல்லது இந்திய நிறுவனங்களோ அல்ல, மாறாக வேறு இடங்களை தலைமையகமாகக் கொண்டவை ஆகும். இவ்வாறான சூழலில் இந்தியாவை தொடர்பு படுத்துவது அடிப்படை ஆதாரமற்றதாகும் என்றுள்ளது.

முன்னதாக, கொழும்பு விமானநிலையத்தில் விசா வழங்கும் செயற்பாடுகளை இந்திய நிறுவனமொன்று சர்ச்சைக்குரிய விதத்தில் பொறுப்பேற்றுள்ளதை தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு விமானநிலையத்தில் குழப்ப நிலையேற்பட்டது.

இலங்கையின் குடிவரவு குடியகல்வு திணைக்களம் விசா வழங்கும் நடவடிக்கைகளை பல வருடங்களாக சுமூகமான முறையில் முன்னெடுத்துவந்துள்ள நிலையில் புதிய நிறுவனம் மேலதிகமாக 25 டொலர்களை அறவிட்டுள்ளது.

அமைச்சரவையின் அனுமதியின்றி இந்திய நிறுவனத்திடம் இலங்கைக்கு வருபவர்களிற்கு விசா வழங்கும் பொறுப்புஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள டெய்லிமிரர் எந்த அமைச்சர் எந்த அதிகாரி இதற்கு அனுமதி வழங்கினார் என்ற கேள்வி எழுந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

வழமையான 75 டொலருக்கு அப்பால் இந்திய நிறுவனம் மேலதிகமாக 25 டொலர்கள் அறவிப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் வெளியிடப்பட்டு காணொளிகள் வெளியாகி இருந்தன.

## விஜயதாசவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் சிலரினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பதவியில் செயற்படுவதற்கு இடைக்கால தடையுத்தரவு விதிக்கப்பட்டது.

## சம்பள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து ஊடகங்கள் மூலம் பரவலான செய்திகள் வெளியாகியிருந்தன. மேலும், மே 1ஆம் திகதி உலக தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கொட்டகலையில் இடம்பெற்ற கூட்டத்திலும், ஜனாதிபதி இதை வலியுறுத்தினார்.

நாளாந்த சம்பள அதிகரிப்பு தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படாத நிலையில், ஜனாதிபதியின் கூற்று தோட்டத் தொழிலாளர்களாலும் பொதுமக்களாலும் தவறாக புரிந்துகொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனமும் அதன் உறுப்பினர்களும் கவலை தெரிவிக்கின்றனர். ஏப்ரல் 30, 2024 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின்படி, தொழிலாளர் ஆணையாளர் நாயகம் தேயிலைச் செய்கை மற்றும் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச நாளாந்த சம்பளத்தை நிர்ணயித்துள்ளார். இந்த முடிவு தொடர்பான ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய மே 15, 2024 வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், வர்த்தமானி அறிவித்தல் தொடர்பான அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கவும் ஆட்சேபனைகளை சமர்ப்பிக்கவும் இந்த அறிவிப்புகள் மூலம் பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்கள் உட்பட அனைத்து பங்குதாரர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அதிகரிக்கப்பட்ட நாளாந்த சம்பளம் 2024 மே 01ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் என சில ஊடகங்கள் அறிக்கையிடுவது தவறானதாகும். உத்தேச புதிய சம்பள அதிகரிப்பு வழங்கப்படுவதற்கான திகதி அல்லது அதிகரிக்கப்பட்ட சம்பளத்தொகை இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. அவ்வாறு ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை என சம்மேளனம் தெரிவித்துக்கொள்கின்றது.

தொழிலாளர் ஆணையாளரால் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் இந்த முன்மொழிவுகளுக்கு ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யும் என்பதை இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் உறுதிப்படுத்துகின்றது.

வர்த்தமானி அறிவிப்பு தொடர்பாக அரச அதிகாரிகளின் அறிக்கைகளும் ஊடகங்கள் அதை தவறாக கையாளும் விதமும் சம்பள அதிகரிப்பு குறித்து, தொழிலாளர்கள் மத்தியில் தேவையற்ற அவநம்பிக்கையை ஏற்படுத்தும் என்று சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

## தொடர்ந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பிலும், விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் தொடர்பிலும் பல்வேறு காரணிகளை நாம் முன்வைத்திருந்தோம்.

நாடாளுமன்றத்தில் சாமர சம்பத் தசநாயக்க பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையை கடுமையாக விமர்சித்தார். ஆனால், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட போது ஏற்படவிருந்த இன, மத கலவரத்தை பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையே தடுத்தார். பாதிக்கப்பட்ட மக்களை அமைதியாக நல்வழிப்படுத்தினார். எனவே உயிர்த்த ஞாயிறு தாக்கல்களை தமது அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்த வேண்டாம் என அரசியல்வாதிகளிடம் கேட்டுக் கொள்கின்றோம். தொடர்ச்சியாக சாமர சம்பத் தசநாயக்க இவ்வாறு கிறிஸ்தவத்தை அவமதிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிடுவதை அனுமதிக்க முடியாது.

மே தினத்துக்காக நாம் கோரிய இடத்தை வழங்காமல் ஆளும் தரப்புச் சதி செய்தாலும், நாம் வெற்றிகரமாக கூட்டத்தை நிறைவு செய்தோம். நாம் கோரிய இடத்தையே ஜே.வி.பி.க்கு வழங்கினர். காலி முகத்திடலையும் கோரினோம். எனினும் காலி முகத்திடல் எந்த கட்சிக்கும் வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டது. அடுத்த வருடம் நிச்சயம் ஆளும் தரப்பாக மே தினக் கூட்டத்தை கொண்டாடுவோம்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் சீ.ஐ.டி. விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இது தொடர்பான வழக்கு இம்மாதம் 10ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. எனவே இதிலிருந்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் விலகியிருக்க முடியாது என்றார்.

## வெளிநாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்நிலை முறைமை ஊடாக விசா விநியோகிக்கும் செயற்பாடு வி.எப்.எஸ்.குளோபல் நிறுவனத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டது.

2023.09.11 ஆம் திகதி நாட்டுக்குள் உள் வரும் போது விசா விநியோகிக்கும் செயற்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்ட வெளியாள் நிறுவனத்துக்கு வழங்கும் பத்திரத்தை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் சமர்ப்பித்திருந்தார்.

இதற்கமைய முறையான விலைமனுகோரலுக்கு அமைய விண்ணப்பம் கோரப்பட்டு, கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களில் இந்த நிறுவனம் மிகச் சிறந்ததாக கருதப்பட்டது.

வெளிநாட்டவர்கள் நாட்டுக்குள் வருகைதரும் போது விசா விநியோகித்தல் மற்றும் நிகழ்நிலை முறைமை ஊடாக விசாவுக்கு விண்ணப்பம் செய்தல் என்பனவற்றுக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது.

இந்த நிறுவனம் நவீன தொழில்னுட்பத்தை பயன்படுத்தி சேவைகளை முன்னெடுத்துள்ளது. 3388 மத்திய நிலையங்கள் ஊடாக 151 நாடுகளுக்கு விசா விநியோகிக்கும் வகையில் இந்நிறுவனம் உலகளாவிய ரீதியில் பிரபல்யமடைந்துள்ளது.

இருப்பினும் கடந்த நாட்களில் இந்நிறுவனத்தின் சேவையில் சிக்கல் தோற்றம் பெற்றுள்ளமை தொடர்பில் ஆராய்வதற்கு ஆளும் தரப்புத் தீர்மானித்துள்ளது. அமைச்சரவையின் அனுமதி இல்லாமல் இந்த நிறுவனத்துக்கு பொறுப்பு வழங்கபட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி முற்றிலும் பொய்யானது.

இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு விசா விநியோகிக்கும் பணிகள் வெளிநாட்டு நிறுவனத்துக்கு முழுமையாகவழங்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்தியும் முற்றிலும் பொய்யானது.

விசா விநியோகிக்கும் நடவடிக்கைகளுக்காக உரிய வசதிகளை வழங்கும் நடவடிக்கைகளுக்கான பொறுப்பு மாத்திரமே இந்நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை தீர்மானத்தை சவாலுக்குட்படுத்தி கருத்துக்களை வெளியிடும் அல்லது செயற்படும் உத்தியோகஸ்தர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விஸா வழங்குவதில் ஏற்பட்ட சிக்கல் நிலையை அடுத்து அங்கு பயணி ஒருவர் அதிகாரிகளுடன் முரண்படும் காட்சிகள் சமூக ஊடகங்களில் பரவலானதைத் தொடர்ந்து ஆளும் தரப்பு இந்த அறிக்கையை விட்டுள்ளது.

## அ'புரத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகக் கொண்டு இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான செயலகத்தின் பணிப்பாளர் நாயகம், அதிகாரிகள், மகா சங்கத்தினர், அனுராதபுரம் மறைமாவட்ட பேராயர் மாஷல் அந்தாதி, அனுராதபுரம் முஸ்லிம் பள்ளிவாசல் மௌலவி அப்துல் கயூம் தலைமையிலான குழுவினர் உள்ளிட்ட தரப்பினரைச் சந்தித்தனர்.

இவர்களுக்கு மேலதிகமாக, நொச்சியாகம, மஹவிலச்சிய பிரதேசவாசிகள், பிரதேச செயலாளர்கள், கிராம அதிகாரிகள், அனுராதபுரம் மாவட்டச்செயலாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் உள்ளிட்ட குழுவினர், அனுராதபுர சிவில் செயற்பாட்டாளர்கள், பிரதேச முப்படை அதிகாரிகள், அனுராதபுரம் சிரேஷ்ட பொலிச் அத்தியட்சகர், பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரிகள், ஊடகவியாலளர்கள், உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கப் செயலகம் மற்றும் ஜனசபா அலுவலகத்தின் அதிகாரிகள்,

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# எரிக் சொல்ஹெய்ம் கருத்துக்கு அம்பிகா சற்குணநாதன் காட்டம்



இலங்கையின் வடபகுதி அமைதியாக உள்ளது. அது சிறப்பான விடயம். பாதுகாப்பு சிறப்பாக உள்ளது என நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் ருவிட்டரில் பதிவிட்டுள்ள கருத்திற்கு கடும் பதிலடி கொடுத்துள்ள இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன், இராணுவத்தினர் அங்கு தங்கள் முகாம்களை விஸ்தரிக்கின்றனர். ஊடகங்கள் சிவில் சமூகத்தினர் போன்றவர்களைப் கடுமையாக கண்காணிக்கின்றனர் துன்புறுத்துகின்றனர் இது அமைதிக்கு மாறான நிலையை ஏற்படுத்துகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

அம்பிகா சற்குணநாதன் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

இலங்கையின் வடபகுதி கடுமையாக இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளது பாதுகாப்பு தரப்பினர் சிவில் சமூகத்தினரை மாற்றுக்கருத்துடையவர்களை ஊடகங்களைக் கண்காணிக்கின்றனர் துன்புறுத்துகின்றனர் அச்சுறுத்துகின்றனர்.

பொதுமக்களின் காணிகளைக் கைப்பற்றுவதன் மூலம் இராணுவம் தொடர்ந்தும் தனது முகாம்களை விஸ்தரிக்க முயல்கின்றது, இந்து வழிபாட்டு தலங்களைப் பௌத்த மதகுருமாரும் தொல்பொருளியல் திணைக்களமும் கைப்பற்றுவதற்கு உதவுகின்றது.

இது பாதுகாப்பின்மையை ஏற்படுத்துகின்றது அமைதிக்கு எதிரான சூழலை உருவாக்குகின்றது.

வேறு விதத்தில் சொல்வதானால் - வெள்ளையடித்தல் இலங்கை அரசாங்கம் அதன் திட்டங்களை முன்னெடுக்க உதவுதல்.- என்றார்.

(05)

# பொத்துவில் மத்திய கல்லூரியில் தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறி



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

2023 இல் உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்காக கல்வி அமைச்சால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற முதலாவது செயற்றிட்டமான தொழில் வழிகாட்டல், தகவல் தொழிநுட்பம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று பாடங்களையும் உள்ளடக்கிய 120 மணித்தியாலங்கள் கொண்ட மூன்று மாத பாடநெறியின் இறுதிநாள் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பொத்துவில் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

அந்த வகையில் இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட 299 பாடசாலைகளில் பொத்துவில் மத்திய கல்லூரியும் ஒன்றாகும். இந்த மத்திய கல்லூரியில் கடந்த 2024.03.05 ஆரம்பிக்கப்பட்டு, இடம்பெற்று வந்த நிகழ்ச்சித் திட்டத்தில் சுமார் 150 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து பயனடைந்தனர்.

அந்த வகையில் அந்த மாணவர்கள் வெகு விமர்சையாக நிகழ்வை ஏற்பாடு செய்ததுடன் அவர்களுடைய கலை, கலாசார நிகழ்வுகளையும் அரங்கேற்றி அவர்களது திறமைகளையும் அதிலே வெளிக்காட்டி இருந்தனர்.

இந்நிகழ்வுக்கு பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ. பிர்னாஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதோடு, தென்கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதி டாக்டர் எம்.எச். ஹாரூன், ஊக்குவிப்புப் பேச்சாளர் சொஹைர் ஏ. காதர் மற்றும் கல்வி அதிகாரி எம்.எஸ். நபீஸ் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் பாடசாலைகளினது அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பல்வேறுபட்ட தரப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

அதேபோன்று இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பாளராகவும், வளவாளராகவும் பயிற்றுவிப்பாளராகவும் செயற்பட்ட திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் ஊடகவியலாளர் எம்.எச். அப்துல் கரீம் இந் நிகழ்வுகளை திறம்பட ஒருங்கிணைத்து வழங்கியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.(05)



# அல் – ஹுமைஸரா அஹதிய்யா பாடசாலையின் பரிசளிப்பு விழா



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அல்-ஹுமைஸராஅஹதிய்யாப் பாடசாலையின் பரிசளிப்பு விழா




கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜாபிர் ஹாஜியார் நினைவு மண்டபத்தில் நடைபெற்றது.

சீனன் கோட்டை பள்ளிச்சங்க தலைவர் முக்தார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மாணவர் தலைவர் பதவியேற்பு, ரமழான் கேள்வி - பதில் திறந்த போட்டியில் வெற்றி பெற்ற மற்றும் ரமழான் ஆன்மீக பயிற்சி நெறியில் கலந்துகொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் என்பன வழங்கப்பட்டதோடு, மாணவர்களின் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் ஜாமிஆ நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் அகார் முஹம்மத் பிரதம அதிதியாகவும், அமானா வங்கியின் பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஏ.ஸி.எம் நுமைர் காஸிம் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார அபிவிருத்தி அதிகாரி முப்தி முர்ஸி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் விஷேட அதிதிகளாக அஹதிய்யா மத்திய சம்மேளனத் தலைவர், களுத்துறை மாவட்ட அஹதிய்யாக்களின் தலைவர் மற்றும் அமானா வங்கியின் பேருவளைக்கிளை முகாமையாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அல்-ஹுமைஸரா அஹதிய்யாவின் அதிபர் அஷ்ஷெய்க் ஸப்வான் ஆரிபின் வழிகாட்டுதலில் இடம்பெற்ற இந்நிகழ்வை அஹதிய்யா நிர்வாகத் தலைவர் கலீபதுஷ் ஷாதுலி அஷ்ஷெய்க் இஹ்ஸானுத் தீன் (நளீமி)யினது தலைமையிலான அஹதிய்யா நிர்வாகம் ஒழுங்கு செய்திருந்தது.



விழாவில் விஷேட உரையாற்றிய பிரதம அதிதி ஜாமிஆ நளீமிய்யாவின் முதல்வர் அஷ்ஷெய்க் அகார் முஹம்மத், பிள்ளைகள் மீதான பெற்றோரின் பணி, அஹதிய்யாக் கல்வியின் முக்கியத்துவம் என்பன குறித்து விளக்கமளித்தார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## காலநிலை மாற்றத்தின் மீதான அக்கறையின் அவசியம்

**இது தேர்தல் காலம். இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் தேவைப்பட்டால் அதற்கடுத்த ஆண்டும் தேர்தல்கள் தொடர்ந்து நடக்க இருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் விவாதங்களில், கலந்துரையாடல்களில் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் மற்றும் கால நிலை மாற்றம் தொடர்பான பிரச்சினைகளுக்கு முக்கிய இடம் வழங்கப்படவேண்டும் என்ற குரல் ஓங்கி எழுந்துள்ளது.**

**சுற்றுச்சூழலியலாளரும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவருமான பொ–.ஐங்கரநேசனிடம் இருந்து இந்த அழுத்தமான குரல் வந்திருக்கின்றது.**

**தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் செம்பசுமை மேதினப் பொதுக் கூட்டம் கொக்குவில் பொற்பதி அறிவாலயத்தில் நடைபெற்றது. இப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பொ.ஐங்கரநேசன் இந்தக் கோரிக்கையை ஆணித்தரமாக வலியுறுத்தினார்.**

**”பூமி நாளுக்குநாள் சூடேறிக் கொண்டிருக்கிறது. கடந்த 173 ஆண்டுகால வானிலை வரலாற்றில் 2023 ஆம் ஆண்டு மிகவும் வெப்பமான ஆண்டாகப் பதிவாகியிருக்கின்றது. பூமியின் வெப்பநிலை கைத்தொழில் புரட்சிக்காலத்தில் பூமி கொண்டிருந்த வெப்பநிலையைவிட 1.5 பாகை செல்சியஸ் அளவால் மட்டுமே உயரலாம் எனச் சூழல் விஞ்ஞானிகள் எச்சரித்திருக்கிறார்கள்.**

**பூமியைச் சூடுபடுத்தும் எமது நடவடிக்கைகளை நாம் உடனடியாகக் கட்டுப்படுத்தாவிடில் பூமியின் வெப்பநிலை வெகுவிரைவில் இந்த எல்லையைக் கடந்துவிடும். மோசமான பேரழிவுகளை ஏற்படுத்தப்போகும் இந்த வெப்ப உயர்வு இதுவரையில் எந்த அரசியல்வாதியையும் உலுக்கியதாகத் தெரியவில்லை.**

**நாம் காலநிலை மாற்றத்தின் பாதகங்களை ஏற்கனவே வெப்ப அலைகளாகவும், குறுகிய நாளில் கொட்டித் தீர்க்கும் அடைமழைகளாகவும் அனுபவிக்கத் தொடங்கி விட்டோம். காலநிலை மாற்றத்தால் ஒருபுறம் விவசாயம் பொய்த்துப் போக, இன்னொருபுறம் கடலில் மீன்கள் காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன. இன்று தென்னைகளைத் தாக்கும் வெள்ளை ஈக்களின் படையெடுப்பும் காலநிலை மாற்றத்தின் விளைவுகளில் ஒன்றுதான். ஆனால், இவற்றையெல்லாம் தற்செயலான –தனித்தனியான நிகழ்வுகளாகவே நம்மில் பெரும்பாலானோர் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இவற்றை ஒன்றுடனொன்று தொடர்புபடுத்திப் பார்க்கும் அளவுக்குச் சமூகம் சூழல் சார்ந்து இன்னும் போதிய அறிவூட்டப்படவில்லை.**

**இந்திய உச்ச நீதிமன்றம் காலநிலை மாற்றங்களின் பாதிப்புகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவரினதும் அடிப்படை மனித உரிமை என்று அண்மையில் தெரிவித்திருக்கிறது.**

**இந்தியத் தேர்தல் ஆணையம் தேர்தல் விஞ்ஞாபனங்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான தமது திட்டங்களைக் கட்சிகள் அறிவிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டுள்ள இலங்கையில் எந்தவொரு வேட்பாளரும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான இன நீதியை முன்வைக்கப் போவதில்லை. சூழல் நீதிக்கேனும் மதிப்பளித்துத் தேர்தல் விஞ்ஞாபனங்களில் காலநிலை மாற்றப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்த வாக்குறுதிகளையேனும் இடம்பெறச் செய்வதற்குத் தேர்தல் ஆணையம் ஆவன செய்யவேண்டும்” என்றார் அவர்.**

**தமிழ்த் தொழிலாளர்கள் குறித்தே சிந்திப்பதற்கு வக்கற்ற தமிழ் அரசியல்வாதிகளுக்கு மத்தியில், சுற்றுச்சூழல் பிரச்சினை குறித்துச் சிந்தித்து அதற்காகக் குரல் கொடுக்க ஒருவர் இருப்பதையிட்டு மகிழ்ச்சி கொள்ளலாம். அவரது குரல் மற்றையவர்களின் செவிப்பறைகளை எட்டுமா என்பதுதான் இங்குள்ள கேள்வி. அரசியல் தீர்வுதான் எல்லாவற்றுக்குமான தீர்வு என்கிற மாயைக்குள் தாங்களும் ஆழ்ந்து மக்களையும் ஆழ்த்தும் தலைவர்களை இந்த ஆழமான கருத்துக்கள் எட்டவேண்டும், எட்டினால் மட்டுமே தமிழரின் தாயகத்தைக் காக்க முடியும். தமிழ் மக்கள்தான் அதனைச் செய்ய முடியும். நாமாகக் குரல் கொடுத்தாலன்றி சுற்றுச் சூழல் பிரச்சினைகள் குறித்து இந்த அரசியல்வாதிகள் அக்கறை கொள்ள மாட்டார்கள்.**

## ஆசை இருக்கு, தாசில் பண்ண...

**என். சத்திய மூர்த்தி**

வழமையான மேதின விழாக்களுக்கு இடையே, தமிழ் சிவில் சமூகத்தினர் வவுனியாவில் கூடிப் பேசி உள்ளனர். அந்த கூட்டத்தில், ஜனாதிபதி தேர்தலில் ஒரு பொது தமிழ் வேட்பாளரை களமிறக்க வேண்டும் என்று அவர்கள் முடிவு செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இது ஒரு நல்ல முன்னெடுப்பு என்றே வைத்துக் கொள்வோம். ஆனால், இது பொது வேட்பாளர் என்ற முயற்சியோடு நின்றுவிடவேண்டுமா அல்லது, தமிழர் அரசியல் பரப்பில் உள்ள அனைத்து தரப்பினரையும் முதலில் உள்வாங்கிக் கொள்ளவேண்டுமா, என்ற கேள்வி எழுகிறது. குறைந்தபட்சம் இந்த சிவில் சமூக அமைப்பினர், அத்தகைய முயற்சியை கையில் எடுத்தால் மட்டுமே அவர்களது நடுநிலைமையும் நம்பகத்தன்மையும் நிரூபணமாகும்.

அவ்வாறான முயற்சி முன்னெடுக்கப்படாவிட்டால், அவர்களும் யாருடைய தாளத்திற்கோ ஆடுகிறார்கள் என்றே கருதப்படும். அது தப்பு தாளமாகவும் பார்க்கப்படும். முக்கியமாக, அம்பு செல்லும் திசை மற்றும் செயல்திறனை வைத்து, எய்தவர்களின் கருத்தோம்பல் விமர்சனத்திற்கு உள்ளாகும். அத்துடன் பொது வேட்பாளர் குறித்த விவாதம் காணாமல் போகும் வாய்ப்பும் உள்ளது.

இதில், இன்னொரு கேள்வியும் எழுகிறது. இப்போது, பொது வேட்பாளர் குறித்து கருத்தாடும் தமிழ் சிவில் சமூகத்தினர், இன்றளவும் தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமை குறித்து ஒரு முறை கூட கூடிகதைத்தார்கள் என்று செய்திகள் கூறவில்லை. அதுவும், தெற்கில் அரகலயா போராட்டத்தை தொடர்ந்து இன்றுவரை, அதற்கான வாய்ப்பும் கட்டாயமும் இருந்தது. ஆனால், சிவில் சமூகத்தினர் யாரும் கண்டு கொள்ளவில்லை.

### புலப்படாத சக்திகள்

இதுபோன்ற செயற்பாடுகள் அல்லது செயலின்மை, சிவில் சமூகத்தின் தற்போதைய நோக்கத்தையே கேள்விக்கு உள்ளாக்குகிறது. அவர்கள் தங்களது சுயாதீன முடிவில் செயற்படுகிறார்களா, அல்லது கண்ணுக்குப் புலப்படாத சில சக்திகளின் பாடலுக்கு உதட்டசைவு மட்டும் செய்கிறார்களா?

புலப்படாத சக்திகள் இருக்கின்றன என்றால், அவர்கள் யார்? உள் நாட்டவரா, தமிழரா, அல்லது புலம்பெயர்ந்தோரா? 2005 ஜனாதிபதி தேர்தலில் அன்றைக்கு ஆளுமையில் இருந்த விடுதலை புலிகள் அமைப்பின் செயற்பாட்டிற்குப் பின்னர். யாரையும் சந்தேகிக்காமல் இருக்க முடியவில்லை.

அதற்காக, புலம்பெயர்ந்தோர், தமிழர் சமூக -அரசியல் பரப்புகள் குறித்துக் கரிசனம் கொள்ளக்கூடாது என்பதல்ல பொருள். மாறாக, அவர்கள் வெளிப்படையாக தமிழ் சமூக- அரசியல் பரப்புகளில் தங்களுடைய நிலைபாடுகளை வெளிப்படுத்தலாம். ஜி.டி.எப். போன்ற புலம்பெயர்ந்தோர் தமிழர் அமைப்புகள் போல், இவர்களும் அவ்வப்போதைக்கு தங்களது கருத்துக்களை எழுத்து மூலம் முன் வைக்கலாம். அவற்றை அனைத்தையும் உள்ளூர் தலைமைகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. கட்டாயப்படுத்தக் கூடாது.

### உண்மை தன்மை

பொது வேட்பாளர் விடயத்தில், புளொட் தலைவர் சித்தார்த்தன் சில கருத்துக்களை முன் வைத்துள்ளார். அவற்றை விமர்சனம் செய்வதை விடுத்து, அவரது கூற்றில் உள்ள உண்மைத் தன்மையையும் ஆராய வேண்டும்.

பத்திரிகைச் செய்திகளின்படி, சித்தார்தன் பொது வேட்பாளர் குறித்து ஒரு முக்கிய கருத்தைத் தெரிவித்துள்ளார். கடந்த கால வாக்குகளிப்பு முறையை சுட்டிக்காட்டி, தமிழர் பகுதிகளில் மொத்தம் உள்ள பன்னிரெண்டு இலட்சம் வாக்குகளில் பாதிக்கு அதிக வாக்குகளை பெற்றால் மட்டுமே பொது வேட்பாளரின் அரசியல் நிலைபாட்டிற்கு தமிழ் மக்களிடையே ஆதரவு இருக்கிறது என்று தென்னிலங்கையும் சர்வதேச சமூகம் நம்பிக்கைகொள்ளும். இல்லையென்றால், தென்னிலங்கை தமிழர் தரப்பை எள்ளிநகையாடும். தற்போதைய கலாசார தாக்குதல்கள் வேகப்படும். இதுதான், சித்தார்த்தன் கூறியதின் சாராம்சம்.

இதில் உள்ள உண்மை சுடும். ஆனால், இன்றளவில், இனப்பிரச்சினையில், தமிழர் தரப்பு ஒரு சேர வாக்களிக்க முன் வருவார்களா? இதற்கான ஆயத்தங்களையும்கூட சிவில் சமூகம் முன்னெடுக்குமா? இல்லை என்றால், அவர்களுடைய தற்போதைய முன்னெடுப்புகள் வெறுமனே கூடிப் பேசிக் கலையும் வகையில் அமைந்தவைதானா?

### சதியா, சாதிப்பா?

இதுபோன்ற வாத-ப்பிரதிவாதங்களுக்கு அச்சாரம் வைப்பது போல் நடந்து முடிந்துள்ளது, ’தமிழ் அரசுக் கட்சியின்’ (?) மே தின விழா. கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆகி விட்டாலும, இன்றும் தமிழ் சமூக-அரசியல் பரப்பில் தமிழ் அரசுக் கட்சியே இனப்பிரச்சினை குறித்து கதையாடும் முக்கிய கட்சியாக இருக்கிறது. ஆனால், நடந்தது என்ன? கிளிநொச்சியில், சிறீதரன் எம்.பி. வழமையாக கூட்டும் மே தின விழாவே கட்சியின் அதிகாரபூர்வமற்ற நிகழ்ச்சியாக மாறியது. அவ்வாறே இருந்தாலும், கட்சித் தலைவர் தேர்தலில் சிறீதரனிடம் தோல்வியுற்ற சுமந்திரனை இந்த முறை புறக்கணித்ததின் மூலம் யார் என்ன சாதித்தார்கள்? அல்லது, எதற்காகதான் சதி செய்தார்கள்?

கடந்த சில ஆண்டுகளாகவே, சிறீதரன் ஏற்பாடு செய்து வரும் இந்த நிகழ்வில் சுமந்திரன்தான் முக்கிய பேச்சாளராக இருப்பார். அப்போது செய்த அதே தவறின் விளைவை சுமந்திரனும் இப்போது அனுபவிக்கிறார். ஆனால், இந்த முறை கட்சியின் தலைவராகத் தொடரும் மாவை சேனாதிராஜா அவருடைய இடத்தை அலங்கரித்துள்ளார்.

கடந்தகாலங்களில், தன்னுடைய தலைமையை எதிர்த்து தான், சிறீதரன்- சுமந்திரன் அணி செயல்பட்டது என்பதை, அவரும் எப்போதும் போல் கண்டு கொள்ளவில்லை. அவர், கிளிநொச்சியில் இந்த முறை பிரசன்னமாகி இருந்தார்.

போதாததற்கு, சி.வி.கே. சிவஞானம் போன்றோரும்கூட கிளிநொச்சி விழாவில் பங்கெடுத்தனர். காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்ற வசனத்திற்கு தாங்கள் விதிவிலக்கல்ல என்பதை அவர்களும் நிரூபித்தனர்.

துரதிர்ஷ்டவசமாக, இது போன்ற நிகழ்வுகளால் மட்டும், சிறீதரன் தரப்பு எதையும் சாதித்துவிடப் போவதில்லை. மாறாக, அவரது கட்சித் தலைவரான தேர்வு குறித்த வழக்கு, பேச்சு மூலம் நீதிமன்றத்திற்கு வெளியே ’செட்டில்’ செய்யப்படுமானால் மட்டுமே. சிறீதரன் தலைவராக முடியும். அது போன்றே, தமிழ் அரசுக் கட்சியின் ’வீடு’ சின்னமும், பிறிதொரு நாளில் தேர்தல் ஆணையத்தால் முடக்கப்படுவதை தடுக்கவும் முடியும்.

### ஒரே சான்ஸ்

இப்போது, பொது வேட்பாளர் என்று கச்சை கட்டிக்கொண்டு களத்தில் இறங்கியுள்ள சிவில் சமூகத்தினர், தமிழ் அரசின் உள்வீட்டு பிரச்சினையை சுமுகமாக தீர்த்து வைத்தால், அதன் பின்னர் அவர்களது வாக்கிற்கும் தமிழ் மக்களிடையே ஏதோ ஒரு வித மரியாதை தோன்றலாம். அப்போது அவர்களது பொது வேட்பாளர் கருத்திற்கும் ஆதரவு பெருகலாம்.

அவ்வாறு இல்லாமல், இதுதான் தமிழ் அரசுக் கட்சியை ஓரம் கட்டக் கிடைத்த ஒரே சான்ஸ் என்று சிவில் சமூகத்தினரும் செயல்படுவார்களேயானால், அவர்களது சாயம் வெளுக்கவும் அதிக நாள் ஆகாது. இவ்வாறு கடந்த காலங்களில் நடந்து வந்ததால்தான், தமிழ் மக்களிடையே சிவில் சமூத்தினர் என்று தங்களைக் கூறிக்கொள்பவர்கள் மீது இருந்த மட்டு-மரியாதை குறைந்து வந்தது.

அந்த வகையில், தமிழ் அரசியல் கட்சிகளும் அதன் தலைமைகளும் மட்டுமல்ல, சிவில் சமூகமும்கூட தங்களது நம்பகத்தன்மையை நிரூபித்துக் கொள்வதற்கான கால-நேரமிது. இந்த அடிப்படை உண்மை தெரியாமல், சிவில் சமூகத்தை தூண்டி விட்டு அவர்களின் நிழலில் யாராவது குளிர் காய நினைத்தால், அது வேலைக்கு ஆகாது.

இந்த உண்மை புரிந்து வரும் போது, ஜனாதிபதி தேர்தல் மட்டுமல்ல, நாடாளுமன்றம் மற்றும், ஏன், மாகாண சபை தேர்தல்கள்கூட நடந்து முடிந்திருக்கக்கூடும். இது எங்கோ இருக்கும் யார் யாருக்கெல்லாமோ தெரிய வேண்டும். அல்லது, புரியவேண்டும்...

காலைக்கதிர் Kalaikkathir

# சூரங்கல் பிரீமியர் லீக் இறுதிப் போட்டியில் பிரதம அதிதியாக எம்.எஸ்.தௌபீக் எம்.பி



கென்வூட் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட சூரங்கள் பிரீமியர் லீக் இறுதிப் போட்டி செவ்வாய்க்கிழமை கென்வூட் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட கௌரவ நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.தௌபீக் கலந்துசிறப்பித்தார். மேலும் இந்நிகழ்வில் கிண்ணியாவின் முன்னாள் நகர பிதா சட்டத்தரணி வைத்;திஸ்ரீயர் ஹில்மி மஹ்ரூப், கிண்ணியா பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர்சனூஸ்,முன்னாள்பிரதேச சபை உறுப்பினர் இப்னுல்லாஹ், பாடசாலை அதிபர் பைசால் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (05)



# சாய்ந்தமருதில் பிரதேச மற்றும் மாவட்ட கலை இலக்கிய விழா





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கலாசார அலுவல்கள் திணைக்களமும், சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார பிரிவும் இணைந்து நடத்திய அம்பாறை மாவட்ட பிரதேச கலை இலக்கிய விழா சாய்ந்தமருது பிரதேச பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அதிதிகளாக அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம். றிம்ஸான், நிருவாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.றம்ஸான், நிருவாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ். நளீர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.சி. முஹம்மட், கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.எம். தௌபீக், ஓய்வு பெற்ற கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அஸ்ரப், பிரதேச கலாசார அதிகார சபையின் செயலாளர் கே.எம்.ஏ.அஸீஸ், பொருளாளர் அஸ்வான் சக்காப் மௌலானா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச். சபிக்காவின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அதிதிகளின் உரை, கலை கலாசார நிகழ்வுகள், பிரதேச மட்ட நிகழ்வுகளில் வெற்றி பெற்றோருக்கான கௌரவிப்பு நிகழ்வுகள் எனப் பல நிகழ்வுகளும் இடம் பெற்றன.

பாலர், சிறுவர், கனிஷ்ட, சிரேஷ்ட, அதிசிரேஷ்ட மற்றும் திறந்த பிரிவுகளில் சுமார் 56 பேர் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கான கௌரவம் இதன்போது வழங்கப்பட்டது.

இவர்களில் சாய்ந்தமருதில் உள்ள இலக்கியத்தில் ஆர்வமுள்ள மாணவ, மாணவிகள் மற்றும் கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் எனப் பல பிரிவினரும் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Roty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhppes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# ஓரங்கட்டப்பட்ட சமூகத்திற்கான இளையோரின் நிதழ்ச்சித் திட்டம்



(எம்.எப்.றிபாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் அலிக்கம்ப தேவ கிராமத்தில் வாழும் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் செயல்திட்டத்தின்கீழ்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக 'ஜடோவ் இளையோர்' அமைப்பின் உறுப்பினர் அப்தான் தெரிவித்தார்.

விழுது நிறுவனத்தின் வழிகாட்டலின் கீழ் ஸ்கோப் திட்டத்தின் மூலின இளைஞர்கள் முன்வந்து அலிக்கம்ப தேவகிராம சமூகத்தினரின் பிரச்சினைகளை வெளிக்கொணரும்வகையில் 'ஓரங்கட்டப்பட்ட சமூகத்திற்கான இளையோரின் குரல்' எனும் தொனிப்பொருளில் இந்நிகழ்ச்சித் திட்டம் இடம்பெற்றது.

ஏனையசமூகத்துடன்அவர்களை ஒன்றிணைத்து வாய்ப்புக்கள் மற்றும் வளங்களையும் பெற்று நிலைபேறான நல்லிணக்கத்தை மக்கள் மத்தியில் உருவாக்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும் என அப்தான் மேலும் தெரிவித்தார்.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மைய நிறுவனத்தின் சமூக ஒருங்கிணைப்பாளர் பி. முரளீதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அருட்த்தந்தை உட்பட சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். இக்ராம் அம்பாறை மாவட்ட தொழில் வழிகாட்டல் அதிகாரசபை உத்தியோகத்தர்கள், இளையோர் அமைப்பினரும் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்ட தொழில் வழிகாட்டல் அதிகாரசபை உத்தியோகஸ்தர் எம். எப்.றிபாஸ் குறிப்பிடுகையில் -

தமது அதிகார சபையால் கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்கான பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இப்பயிற்சி நெறியில் இணைந்துகொள்ள ஆர்வமுள்ள மாணவர்கள் இணைந்து கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

இளைஞர் ஒரவர் கருத்து தெரிவிக்கையில் -

தமது கிராமத்திலுள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர்களின் வாழ்கை முறை தொடர்பாகவும், நிரந்தர தொழில் தன்மையானதுஇப்பிரதேசமக்களது பல சமுதாய நிலை காரணிகளில் செல்வாக்கு செலுத்துகின்றது. அந்த வகையில் பாடசாலை மாணவர்களின் இடைவிலகல், இளவயதுதிருமணம்,ஆரோக்கியம் இல்லா குடும்பநிலை என பல விடயங்களை சுட்டி காட்டலாம். இதனை விட போக்குவரத்து உட்க்கட்டமைப்புபாதிப்புமற்றும்அரச பயணவசதிசேவைகள்இல்லாமை இம்மக்களின் வாழ்வியல் சார்ந்த முறையில்எதிர்மறைவிளைவுகள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது எனவும் கூறினார். (05)

# உலகளாவிய இராமகிருஷ்ண மிஷனின் 17ஆவது தலைவர் கடமை பொறுப்பேற்பு.







( வி.ரி.சகாதேவராஜா)

உலகளாவிய இராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடம் ஆகியவற்றின் 17 ஆவது பெருந்தலைவர் அதிவணக்கத்துக்குரிய சங்கருரு ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்தா ஜீதனது, சங்க குருவிற்கான வாசஸ்தலத்திற்கு நேற்று (வியாழக்கிழமை) எழுந்தருளினார்.

அந்த நிகழ்வில் இராமகிருஷ்ண மிஷனின் உயர்பீட சுவாமிகள் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

அவர் அங்கு தலைமைப் பொறுப்பை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டார்.

அவர் கடந்த ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி பேலூர் மடத்தில் நடைபெற்ற மடத்தின் அறங்காவலர்கள் குழு மற்றும் மிஷனின் நிர்வாகக் குழு கூட்டத்தில் இராமகிருஷ்ண மடம் மற்றும் இராமகிருஷ்ண மிஷன் ஆகியவற்றின் 17 ஆவது தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவரது நியமனத்தை அடுத்து இந்திய பிரதமர் மோடி நேரடியாக சென்று அவரை வாழ்த்தியிருந்தார்.

அகில உலக இராமகிருஷ்ண மிஷனின் 16 ஆவது பெருந்தலைவர் அதி வணக்கத்திற்குரிய சங்ககுரு ஸ்ரீமத் சுவாமி ஸ்மரணானந்தஜி மகராஜ் கடந்த மாதம் தனது 94 ஆவது வயதில் இயற்கையெய்தியதை அடுத்து இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)



## அ'புரத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதவாச்சி பிரதேசத்தில் யுத்தத்தில் பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்தவர்கள், எலவக, மஹகொன்கஸ்கட பிரதேசவாசிகள், கெபதிகால்லாவ மற்றும் ஹொரவ்வொத்தானை பிரதேச செயலக பிரிவினர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த சந்திப்பின் போது வடக்கு கிழக்கில் ஏற்பட்ட மோதல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள், அதனால் ஏற்பட்ட பயங்கரமான அனுபவங்கள், எதிர்காலத்தில் அவ்வாறு நடப்பதை தடுப்பதற்கான அவசியம் உள்ளிட்ட நோக்கங்களை அடைவதற்கான சுயாதீன அலுவலகம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டியதன் அவசியம் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

உத்தேச ஆணைக்குழுவின் பரிந்துரைகளின்அடிப்படையில்சட்ட நடைமுறைப்படுத்தும்நிறுவனங்கள் மற்றும்தற்போதையஅரசாங்கத்தின் கொள்கைரீதியானதீர்மானங்களை மேற்கொள்வதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கான அதிகாரங்களை கொண்டிருப்பதன் முக்கியத்துவம் மற்றும் முன்னர் சமாதானத்திற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதிஆணைக்குழுவிலிருந்து, உத்தேசசுயாதீனஆணைக்குழுவின் செயற்பாடுகள் எவ்வாறு வேறுபட போகின்றன என்பது தொடர்பிலான தெளிவுபடுத்தல்கள்வழங்கப்பட்டன.

இவ்வாறான யுத்த சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ள 26 நாடுகளில் உண்மையைகண்டறியும்ஆணைக் குழுக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், போருக்குப் பின்னர் நிலைமாறுகால நீதியின் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய்வதற்கான இடைக்கால செயலகம் 12 நடைமுறையில் இருப்பதோடு நிகழ்வுகள் தொடர்பிலான விடயங்களை ஆராய்ந்து வருகின்றது.

அந்த நாடுகளின் அனுபவங்களின் அடிப்படையில் நமக்கான வழிகாட்டுதல்களை அமைப்பதன் முக்கியத்துவம், உத்தேச ஆணைக்குழுவின் உள்ளடக்கத்திற்கு அமைய, பணிப்பாளர்கள் மற்றும் செயலகத்திற்கு மேலதிகமாக, உள்நாட்டு, வெளிநாட்டுநிபுணர்கள் உள்ளடங்கிய ஆலோசனைக் குழு ஆகியவற்றை இந்தச் செயலகம் உள்ளடக்கியிருக்கும் என்பதோடு, பொறுப்புக்கூறலை அடிப்படையாக கொண்டதாக அமையப்போகும் இந்தச் செயலகத்தின் சுயாதீனத் தன்மை குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

அதற்கமைய, பாராளுமன்ற சட்டத்தின்மூலம்உண்மை,ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான சுயாதீன ஆணைக்குழுவை ஸ்தாபிக்கஅரசாங்கம்எடுத்திருக்கும் நடவடிக்கைகள், அதனை அமைப்பதற்கான பணிகளின் உண்மைத் தன்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான பொறிமுறையின் இடைக்கால செயலகத்தின் வகிபாகம், 2024 ஜனவரி 01 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சட்டத்தின் முக்கியமான விடயங்கள் மற்றும் உத்தேச சட்டம் மற்றும் பொறிமுறையின் முக்கிய அம்சங்கள் தொடர்பிலான பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் கருத்துக்களை அறிதல் உள்ளிட்ட விடயங்கள்தொடர்பிலும் இங்கு கலந்தாலோசிக்கப்பட்டது.

இதன்போது, உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயலகத்தின் அதிகாரிகள் குழுவினால் 1983-2009 வரையான காலப்பகுதியில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட இன மோதல், அதனுடன் இணைந்ததாக நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட பாதிப்புக்களை ஈடுசெய்வதற்காகமுன்வைக்கப்பட்ட யோசனைகள் தற்போதும் வர்த்தமானி பத்திரமாக மாத்திரமே காணப்படுவதால்,மேற்படிகுழுவின் பரிந்துரைகளை ஆராய்ந்து அந்தச் சட்டமூலத்தை மேலும்வலுப்படுத்தி திருத்தங்களை செய்ய வேண்டும் என்ற அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு குறித்தும் பங்குதாரர்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

அதேபோல் அனுராதபுரம் மக்களின் பிரச்சினைகள் மற்றும் யுத்தம் முடிந்திருந்தாலும் அப்பகுதி மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பிலும் உரிய அரசாங்க அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்படும் என இந்த சந்திப்பில் உறுதியளிக்கப்பட்டது.

## உமா ஓயா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டம் சுமார் ஒருமாத காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க மற்றும்ஈரான்ஜனாதிபதிஇப்ராஹிம் ரைசி ஆகியோரின் தலைமையில் குறித்த திட்டம் அண்மையில் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

2007 நவம்பர் 27ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் 2008ஏப்ரல்21ஆம்திகதிஆரம்பித்து வைக்கப்பட்டது.

## சட்டவிரோதச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர்இதனைத் தெரிவித்தார். அங்குமேலும்கருத்துத் தெரிவித்ததாவது:

விவசாயத்துறை சார் பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் அதனுடன் இணைந்து செயற்படும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையும் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்குகின்றது. இதன்படிதேயிலை, இறப்பர்மற்றும் தேங்காய் உட்பட சிறு ஏற்றுமதிப் பயிர்கள் உள்ளிட்ட அனைத்துவித விவசாய உற்பத்திகளும் இந்த அமைச்சின் கீழ் உள்ளன.

அதேபோன்று இந்நாட்டில் 10 பெரும் அணைகள் இருக்கின்றன. அவை இந்நாட்டு நீர்மின்சார உற்பத்திக்கும் நீர்ப்பாசனத்த்திற்கும் பெரும் அளவில்பங்களிக்கின்றன. எனவே இந்த இரு அமைச்சுக்களையும் நாம் முறையான வகையில் செயற்படுத்துவதுடன்,நவீனவிவசாயபொறிமுறைகளுடன்கூடியஅடித்தளத்தை இடுவோமாயின்எதிர்காலத்தில்எமது நாட்டை தன்னிறைவு அடையச் செய்ய முடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

அதற்காக தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ் விவசாய அமைச்சும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சும் ஒரே அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. அதன் மூலம் இவற்றின் செயற்பாடுகளை மிகவும் இலகுவாக முன்னெடுக்கதேவையானபணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோன்று விவசாய நடவடிக்கையுடன் தொடர்புடைய மகாவலி அபிவிருத்தி அதிகார சபை தொடர்பான அமைச்சும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. தற்போது இவற்றின்செயற்பாடுகளைசெயற்திறன்மிக்க வகையில் முன்னெடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

ஒரு சில இடங்களில் கைவிடப்பட்டுள்ள சுற்றுலா பங்களாக்களை புனர்நிர்மாணம்செய்யநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மிகவும் அழகான சுமார் 30 பங்களாக்களும் உள்ளன.

அத்துடன், மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணி தொடர்பில் சிக்கல்கள் காணப்படுகின்றன. உறுமய திட்டத்தை அமுல்படுத்துவதற்கு இணையாக மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான காணிகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கருத்தின் அடிப்படையில் காணி உரிமைகள் இல்லாத மக்களுக்கு முழு உரிமையுடைய காணி உறுதிகளை வழங்கும் உறுமய வேலைத்திட்டம் மிக முக்கியமான வேலைத்திட்டம் என்பதைக் கூற வேண்டும். இதன் கீழ், சுமார் 25,000 காணி உறுதிகள் வழங்கும் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன.

பொலன்னறுவை மாவட்டத்தில் மேலும் 6000 பேருக்கு இந்த வார இறுதியில் காணி உறுதிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான காணிகளில் சட்ட விரோத செயற்பாடுகளை மேற்கொள்ள இடமளிக்கப்பட மாட்டாது - என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையை அண்டிய கடற்கரையில் மனித எச்சங்கள் அகழ்வு



யாழ்ப்பாணம் - புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையை அண்டிய கடற்கரை பகுதியில் மனித எலும்பு கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) அகழ்வு பணிகள் ஆரம்பித்துள்ளன.





ஊர்காவற்துறை மாவட்ட நீதிபதி நீதீவான் நளினி சுபாகரன், சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் முன்னிலையில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தில் அரசினர் வைத்தியசாலையை அண்மித்த பகுதியிலுள்ள தென்பெருந்துறை சதானந்தசிவன் ஆலயத்தின் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் வேளையில், ஆலய சூழலில் கிடங்கொன்றை வெட்டிய போது , மனித எலும்பு கூட்டு எச்சங்கள் அண்மையில் வெளிவந்தன.

அதனைத் தொடர்ந்தே கிடங்கு வெட்டும் பணிகளை இடைநிறுத்தி அது தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டதை , அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், அவ்விடத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் எடுத்த நிலையில் அவ்விடத்தில் அகழ்வு பணிகளை முன்னெடுக்க, ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் அனுமதி கோரி விண்ணப்பம் செய்தனர்.

அதன் அடிப்படையில் நேற்று நீதிமன்றத்தின் அனுமதியுடன் அவ்விடத்தில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (05)

# புத்தளம் கருவலகஸ்வெளவில் 3 மாத யானைக் குட்டி சாவு





(எம்.எச்.எம் சியாஜ் )

புத்தளம் கருவலகஸ்வெள எகொடபிட்டிய பகுதியில் 3 மாத யானைக் குட்டியொன்று உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப் பட்டுள்ளது.

குறித்த யானைக் குட்டியை பெரிய யானைகள் காலால் மிதித்து கொன்று இருக்கலாமென சந்தேகிப்பதாக கருவலகஸ்வெள வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த யானைக்குட்டியை குழிதோண்டிபுதைப்பதற்குநடவடிக் கை முன்னெடுக்கப்பட்டதாக வன ஜீவராசிகள் திணைக்கள அதிகா ரிகள் இதன்போது தெரிவித்தனர். (05)

# காலநிலை மாற்றப் பிரச்சினைக்கும் அரசியல் விவாதங்களில் இடம் தேவை

## மேதினப் பொதுக்கூட்டத்தில் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



காலநிலைமாற்றம்சகலதொழில் துறைகளையும் மிக மோசமாகப் பாதித்துக் கொண்டிருக்கிறது. தொழிலாளிகள் தங்கள் தொழில் வாய்ப்புகளை இழந்து வீதிக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒருபவ் இவைபற்றி அரசாங்கமோ ஒருபவ் அரசியல் கட்சிகளோ சிந்திப்பனவாக இல்லை. உழைப்பாளர் தினப் பொதுக் கூட்டங்கள் வெற்று அரசியல் கோசங்களாலேயே நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலை மாறவேண்டும். அரசியல் விவாதங்களில் காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பிரச்சினைகள் முன்னுரிமை பெறவேண்டும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் செம்பசுமை மேதினப் பொதுக் கூட்டம் கொக்குவில் பொற்பதி அறிவாலயத்தில் நடைபெற்றது. இப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

பூமி நாளுக்குநாள் சூடேறிக் கொண்டிருக்கிறது. கடந்த 173 ஆண்டுகால வானிலை வரலாற்றில் 2023 ஆம் ஆண்டு மிகவும் வெப்பமான ஆண்டாகப் பதிவாகியிருக்கின்றது. பூமியின் வெப்பநிலை கைத்தொழில் புரட்சிக்காலத்தில் பூமி கொண்டிருந்த வெப்பநிலையைவிட 1.5 பாகை செல்சியஸ் அளவால் மட்டுமே உயரலாம் எனச் சூழல் விஞ்ஞானிகள் எச்சரித்திருக்கிறார்கள்.

பூமியைச்சூடுபடுத்தும் எமது நடவடிக்கைகளை நாம் உடனடியாகக் கட்டுப்படுத்தாவிடில் பூமியின் வெப்பநிலை வெகுவிரைவில் இந்த எல்லையைக் கடந்துவிடும். மோசமான பேரழிவுகளை ஏற்படுத்தப்போகும் இந்த வெப்ப உயர்வு இதுவரையில் எந்த அரசியல்வாதி யையும் உலுக்கியதாகத் தெரியவில்லை.

நாம் காலநிலை மாற்றத்தின் பாதகங்களை ஏற்கனவே வெப்ப அலைகளாகவும், குறுகிய நாளில் கொட்டித் தீர்க்கும் அடைமழைகளாகவும் அனுபவிக்கத் தொடங்கி விட்டோம். காலநிலை மாற்றத்தால் ஒரு புறம் விவசாயம் பொய்த்துப் போக, இன்னொருபுறம் கடலில் மீன்கள் காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன. இன்று தென்னைகளைத் தாக்கும் வெள்ளை ஈக்களின் படையெடுப்பும் காலநிலை மாற்றத்தின் விளைவுகளில் ஒன்றுதான். ஆனால், இவற்றையெல்லாம் தற்செயலான - தனித்தனியான நிகழ்வுகளாகவே நம்மில் பெரும்பாலானோர் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இவற்றை ஒன்றுடனொன்று தொடர்புபடுத்திப் பார்க்கும் அளவுக்குச் சமூகம் சூழல் சார்ந்து இன்னும் போதிய அறிவூட்டப்படவில்லை.

இந்திய உச்சநீதிமன்றம் காலநிலை மாற்றங்களின் பாதிப்புகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவரினதும் அடிப்படை மனித உரிமை என்று அண்மையில் தெரிவித்திருக்கிறது.

இந்தியத் தேர்தல் ஆணையம் தேர்தல் விஞ்ஞாபனங்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான தமது திட்டங்களைக் கட்சிகள் அறிவிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டுள்ள இலங்கையில் எந்தவொரு வேட்பாளரும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான இனநீதியை முன்வைக்கப் போவதில்லை. சூழல் நீதிக்கேனும் மதிப்பளித்துத் தேர்தல் விஞ்ஞாபனங்களில் காலநிலை மாற்றப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்த வாக்குறுதிகளையேனும் இடம்பெறச் செய்வதற்குத் தேர்தல் ஆணையம் ஆவன செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.(05)

# பஸ் சாரதிகளுக்குக் கஞ்சா விற்பனை: போதைப்பொருளுடன் ஒருவர் கைது

## வெலிமடையில் சம்பவம்

பஸ் சாரதிகளுக்குக் கஞ்சா போதைப்பொருள் விற்பனை செய்வதாகச் சந்தேகிக்கப்படும் நபரொருவர் வெலிமடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிமடை நகரத்தில் உள்ள பஸ் சாரதியொருவர் கஞ்சா போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட நிலையில் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித் தனர்.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து 13 கிராம் நிறையுடைய கஞ்சா போதைப்பொருள் மற்றும் 26 கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலி மடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# கிணற்றிலிருந்து இரண்டரை மாத குழந்தையின் சடலம் ஒன்று மீட்பு

## கற்பிட்டியில் சம்பவம், தாய் கைது

கற்பிட்டி, கந்தகுடாவ பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றுக்குள் அருகில் உள்ள கிணற்றிலிருந்து நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை இரண்டரை மாத குழந்தையின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

மொஹமட் பாத்திமா என்ற இரண்டரை மாத குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் உயிரிழந்த குழந்தையின் தாய் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இந்த மாத இறுதியில் வெளிவரும்

கல்விப் பொதுத்தராதர உயர்தர (2023) பரீட்சை பெறுபேறுகள் இம்மாதம் கடைசி வாரத்தில் வெளியிடப்படும் என்று பரீட்சை திணைக்கள வட்டாரங்கள் தெரிவித் தன.

2023 ஆம் ஆண்டுக்கான உயர்தர பரீட்சைக்கு மொத்தம் 3 லட்சத்து 46 ஆயிரத்து 976 பேர் விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களில், 2 லட்சத்து 81 ஆயிரத்து 445 பேர் பாடசாலை விண்ணப்பதாரர்களும் 65 ஆயிரத்து 531 தனியார் விண்ணப்பதாரர்களும் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

இதேவேளை கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சை மே இரண்டாவது வாரத்தில் தொடங்கவுள்ளமை குறிப்பிடத்தக் கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# காரைதீவு ஆர்.கே.எம் பெண்கள் வித்தியில் சாதாரண தர மாணவர்கள் தின நிகழ்வு







(சர்ஜுன் லாபீர்)

காரைதீவு ஆர்.கே.எம் பெண்கள் வித்தியாலயத்தில் க.பொ.த(சா/த) மாணவர் தின நிகழ்வு பாடசாலை அதிபர் எஸ்.ரவிந்திரன் தலைமையில்நேற்று(வியாழக்கிழமை)கல்லூரியின் ஆராதனை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளரும், பிரபல வளவாளருமான வை.ஹபிப்புல்லா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் இந் நிகழ்வுக்கு கௌரவ அதிதிகளாக காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.சஞ்ஜிவன் ,பழைய மாணவர் சங்க செயலாளர் வி.விஜயரகுந்தன் உட்பட பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் கல்விசார உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இம்முறை க.பொ.த(சா/த) பரீட்சை எழுதும் மாணவர்களின் கலை,கலாசார நிகழ்வுகளும் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றதுடன் தேசிய மட்டத்தில் சாதனைகள் புரிந்த மாணவர்களும் கௌரவித்தது பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)

# அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசல் ஜமாத்தினரின் ஒன்றுகூடல் நிகழ்வுகள்





(எம். எப். றிபாஸ்)

அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசல் ஜமாத்தினரின் ஒன்று கூடல் நிகழ்வு பீச்ஹவுஸில் இடம் பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேசத்தின் எதிர்கால அபிவிருத்தி, கல்வி, கலாசாரம் மற்றும் ஏனைய விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

இதேவேளைபல்வேறுபட்டசமூகசேவையை செய்து வரும் தொழிலதிபரும், சிறந்த சமூக சேவையாளருமான எஸ்.எம்.ஐ.தௌபீக் ஹாஜியாரை முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் யூ. எல். ஏ. அஸீஸ் பொன்னாடை போத்தி கௌரவித்தார். (05)



# மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் சாவு

## கிரி உல்லவில் சம்பவம்

கிரிஉல்லபொலிஸ்பிரிவிற்குற்பட்ட வெல்லாவ பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில்ஒருவர்உயிரிழந்துள்ளார்என கிரி உல்ல பொலிஸார் தெரிவித்தனர். பன்னல பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயது நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நிக்கபொதயிலிருந்து வெல்லாவ நோக்கிப்பயணித்த மோட்டார்சைக்கிள் ஒன்றுசாரதியின் கட்டுப்பாட்டைஇழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரமொன்றில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர் தம்பதெனிய வைத்தியசாலையில் சேர்க்கப் பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் தம்பதெனிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன்இதுதொடர்பான விசாரணைகளைகிரிஉல்லபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# போதைப்பொருள்களுடன் 8 பெண்கள் உட்பட 641 பேர் கைது

நாடளாவிய ரீதியில் புதன் கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது நச்சுத்தன் மைமிக்க போதைப்பொருள்களுடன் 8 பெண்கள் உட்பட 641 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 16 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப் புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள்களுக்கு அடிமை யாகியுள்ள 3 பேரை புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 158 கிராம் ஹெரோயின்,101 கிராம் ஐஸ்,3,169 கிராம் கஞ்சா,33 கிராம் ஹெரோயின்,10 கிராம் ஐஸ் மற்றும் 184 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.(05)

# மண்மேடு சரிந்து நசியுண்டவர் சாவு

## வரக்காபொலவில் சம்பவம்

வரக்காபொல பொலிஸ் பிரிவிற்குற்பட்ட பகுதியில் மண் மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந் துள்ளார்என வரக்காபொலபொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

எலிபன்கமுவ , தொலங்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயது நபரொருவரே இவ்வாறு உயிரிழந் துள்ளார்.

இவர் வீடு ஒன்றை நிர்மா ணிப்பதற்காக அத்திபாரம் வெட்டிக் கொண்டிருந்த போது திடீரென மண் மேடு சரிந்து வீழ்ந்ததில் பலத்த காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் வரக்காபொல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரதுசடலம்வரக்காபொல வைத்தியசாலையில்வைக்கப்பட்டுள்ள நிலையில் வரக்காபொல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# நெல்லூர் கலைமகள் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு



(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில்உள்ளநெல்லூர்கலைமகள் வித்தியாலய பாடசாலையில் கல்வி கற்கும் வறிய குடும்பங்களுடைய 60 மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் கற்றல் உபகரணங்கள்மற்றும்புத்தகப்பைகள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வு பாடசாலையின் அதிபர். பா. லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

'எழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்' எனும் தொனிப்பொருளில் இணைந்த கரங்கள் அமைப்பானது மாணவர் களுக்கு கற்றல் உபகரணங்களை பல கஸ்ரபிரதேசங்களில் உள்ளபாடசாலை மாணவர்களுக்கு உதவியினை வழங்கி வருகின்றது.




மேலும் இந் நிகழ்வில் பாடசாலை இணைப்பாடவிதான இணைப்பாளர் சி. கண்ணன், முன்பள்ளி பாடசாலை உதவிக் கல்விப் பணிப்பாளர் சு. கணேஸ்ஆகியோர்கலந்துகொண்டனர்.

மேலும் ஆயித்தியமலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் அதிபர் து. வித்தியானந்தனுடன் இணைந்த கரங்கள்அமைப்பின்உறுப்பினர்களான, சி.காந்தன், சி.துலக்சன், சனாதானன் ஆகியோர் கலந்து கொண்டு 60 மாணவர்களுக்கான பாடசாலைக்கு செல்வதற்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பன வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

## நடன நிகழ்வுகள்










இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களமும் காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றமும் இணைந்து நடத்திய முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா அங்குரார்ப்பண நிகழ்வில் விபுலாநந்தா நாட்டிய நிருத்தியாலய மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் சிறப்பாக இடம்பெற்றன. (05)

## புதிய ஆளுநர்களாக இருவர் பதவியேற்பு





இரண்டு புதிய ஆளுநர்கள் நேற்று (வியாழக்கிழமை) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இதன்படி, தென் மாகாண ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, வடமேல் மாகாண ஆளுநராக அசீர் அஹமட் ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். (05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.05.2024இல் வெளியிடப்பெற்றது